# திருத்தந்தையின் தென்னமெரிக்கப் பயணம்.

பரிசுத்த தந்தை பாப்பரசர் பிரான்சிஸ் செப்டம்பர் மாதம் 6-ஆம் திகதி முதல் 10-ஆம் திகதி வரை தென்னமெரிக்காவின் கொலம்பியா (Columbia) நாட்டுக்குத் தன் அப்போஸ்தலிக்கத் திருப் பயணத்தை மேற்கொண்டார். ஐம்பது ஆண்டுகளாக நடைபெற்ற உள் நாட்டு யுத்தம் முடிந்து, புதிய ஒரு சமுதாயம் படைக்க மிகவே முயற்சி செய்யும் இம்மக்கள் பெரும் பாலும் அனைவரும் கத்தோலிக்கர்களே என்பதால் பாப்பரசரின் வருகை மிகுந்த ஆர்வத்துடன் இவர்களால் எதிர்பார்க்கப் பட்டது. பல இலட்சக்கணக்கான மக்கள் பரிசுத்த தந்தையை வரவேற்க விமான நிலையத்தில் கூடியிருந்தனர்.

பாப்பரசர் இவர்களுக்கு எடுத்துச் சொன்ன செய்தி இது தான்:

- **சமாதானம் முதலில் பிறக்க வேண்டியது மனிதனின் உள்ளத்தில்.**

- **யுத்தம் முடிந்தாலும், இரு பிரிவினருக்கும் இடையே ஒப்புரவு** (reconciliation) **உண்டாகாமல் இருந்தால் சமாதானம் என்பது கேள்விக் குறியே.**

- **நாட்டில் மக்களுக்குள் நிறைய ஏற்றத் தாழ்வுகளை வைத்துக் கொண்டு சமாதானத்தைப் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை.**

- **சமத்துவம், வார்த்தைகளில் வன்முறை அகற்றல், மனிதப் பண்புகளை மதித்து நடத்தல், பொது நல சேவை, ஆகிய குறிப்பீடுகளின் மூலம் தான் சமுதாயத்தை மாற்ற முடியும்.**

- **எம் விசுவாசம்** (faith) **எம் உள்ளங்களில் விதைத்துள்ள இரு பெரும் கொடைகள்: சந்தோசமும்** (joy), **நம்பிக்கையும்** (hope). **இவ்விரு கொடைகளையும் யாரும் திசை திருப்பி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.**

**எதிர் காலத்தை இறைவன் கரங்களில் ஒப்படைத்து செபிப்போம்.**

கொலம்பியா நாட்டின் ஜனாதிபதி அமைதியின் தூதராக வந்துள்ள பாப்பரசரை நாட்டிற்கு இறைவன் அனுப்பும் பெரிய கொடையாக வரவேற்றார். கொரில்லா யுத்தம் மூலம் ஐம்பது ஆண்டுகளாக சண்டையிட்ட FARC என்னும் கொரில்லாக்களின் தலைவர் தாங்கள் செய்திருந்திருக்கக் கூடிய வன்முறைகளுக்காக பாப்பரசரிடம் மன்னிப்புக் கோரினார். ஐந்து நாட்களாக கொலம்பியா நாட்டின் பல நகர்களை சந்தித்து இறைவன் பெயரால் மக்களுக்கு நற்செய்தியும், இறை ஆசீரும் வழங்கிய திருத்தந்தை நலமுடன் மீண்டும் வத்திக்கான் நாடு சென்று சேர்ந்தார்.

**அனைவருக்கும் பிறந்திருக்கும் கல்வியாண்டு அறிவு, ஆற்றல், சிந்தனைச் செல்வங்களை வானின் கொடையாக நிறைவாக அருள இறைவனை வேண்டி நிற்கின்றோம்.**

கிறிஸ்துவில் அன்புடன்,
Rev. Fr. Tiburtius Fernandez. SMA